நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினைந்திற்கு மேற்படுமாயின் 26-3-68 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ii) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு பதினைந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது பற்றிய தீர்மானத்தை மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சரவர்கள் முன்மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "தமிழ் நாடு சட்டப்பேரவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியின்கீழ் 1968–69-ம் ஆண்டுக்குரிய பொதுக் கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி பதினைந்து உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் தேதியன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது

3. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(iii) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைமை வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாளகளை 20-3-68 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 21-3-68 வியாழக்கிழமை காலை 11 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 22-3-68 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்குள் கொடுக்கலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினைந்திற்கு மேற்படுமாயின் 26-3-68 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

6. 1968-69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 25—ஆதிவாசிகள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து 1968–69-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம். 1968–69-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு. 7-ஆம் நாள்—மானியக் கோரிக்கை எண் 25, மாண்புமிகு அரிசன நல செய்தித்துறை அமைச்சர் அவர்கள்.